# பாடசாலையின் முகாமைத்துவச் செயற்பாடுகளில் பெண் ஆசிரியர்களின் பங்களிப்பு
# (நுவரெலியா மாவட்டத்தின் ஹற்றன் கல்வி வலய தமிழ் மொழி மூல பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**Malini Muraleetharan**[1]**,J.Rasanayagam**[2]
[1]Sripada College of Education,
[2]Department of Education, University of Jaffna

*muraleetharanm1@gmail.com, luxmy2001@gmail.com,*

***ஆய்வுச்சுருக்கம் :*** *ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் பெண் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் முகாமைத்துவம் சார் பிரச்சினைகளை இனங்காணும் வகையில் இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. ஹட்டன் கல்வி வலயதில் கோட்டம் 1 இற்குரிய 10 பாடசாலைகள் படைகொண்ட மாதிரியெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டது. ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலிருந்து அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களிடம் இருந்து நேர்காணல் மூலமாகவும், 50 பெண்ணாசிரியர்களிடம் இருந்து வினாக்கொத்து மூலமாகவும், பாடசாலைகள், வலயக்கல்வி அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஆவணங்கள் மூலமாகவும் தகவல்கள் திரட்டப்பட்டன. அவை புள்ளிவிபரவியல் நூற்றுவீத அடிப்படையிலும், 5 புள்ளிகள் லைக்கேற் அளவுத்திட்டத்திலும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நிறுவன ரீதியில் காணப்படும் பால்நிலை வேறுபாடு, பெண்ணாசிரியர்களின் கருத்துக்கள் குறைந்தளவில் உள்வாங்கப்படுதல், ஆசிரியர்களின் லீவு, நேரமுகாமைத்துவம் பேணுவதில் இடர்பாடு, வகுப்பறைக் கவின்நிலையை மேம்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் என்பன கண்டறியப்பட்டன. நிறுவன ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் பெண்ணாசிரியர்கள் மனவழுத்தத்திற்கு உள்ளாகுதல், குறித்த வயதிற்கு முன்பாகவே ஓய்வு பெற முட்படுதல், உளவியல் பிரச்சினைகள், வினைத்திறனான கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள முடியாமை, தொழில் திருப்தியின்மை ஏற்படல் போன்ற எதிர்மறையான நிலைமைகளுக்கு உட்படுவதையும் கண்டறிய முடிந்துள்ளது. பெண்ணாசிரியர்களை 21ம் நூற்றாண்டின் திறன்களுக்கு ஏற்ப மாற்றும் வகையிலான பயிற்சிகளை வழங்குதல், பால் வேறுபாடின்றி கடமைகளையும், பொறுப்புக்களையும் பகிர்ந்தளித்தல், வெகுமதிகள், பாராட்டுக்களை வழங்குதல், சிறந்த கற்றல் கற்பித்தலுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், நிறுவனம் சார் செற்பாடுகளில் ஈடுபட வைத்தல் என்பவற்றின் மூலம் இப் பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.*

***திறவுச் சொற்கள் :-*** *பெண் ஆசிரியர்கள், நிறுவனம் சார் செயற்பாடுகள், முகாமைத்தும் சவால்கள்*

## 1.1 ஆய்வு அறிமுகம்

மாறும் உலகிற்கு பொருத்தமாக எதிர்கால சந்ததியினை உருவாக்குவது கல்வியின் முக்கிய நோக்கமாகும். “தரமான கல்வி” (Quality Education) என்பது 21ம் நூற்றாண்டுக் கல்வி உலகிற்கான மிக முக்கிய தொனிப் பொருளாக அமைகின்றது. தரமான கல்வியினூடாகவே தரமான வாழ்க்கையையும், தரமான சமூகத்தையும் தோற்றுவிக்க முடியும். அதே சமயம் பாடசாலையில் மாணவர்களின் கற்றலுடன் நேரடித் தொடர்புள்ளவர்களாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர். நவீன கல்வி உலகிற்கு பொருத்தப்பாடு உடைய மாணவர்களை உருவாக்கும் பொறுப்பும் ஆசிரியர்களையே சாரும். அதாவது தற்கால கல்விக் கட்டமைப்பின் கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர்களே பொறுப்பு கூற வேண்டியவர்களாகவும், வகை கூற வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

இலங்கையில் 2019 ம் ஆண்டில் பெறப்பட்டுள்ள புள்ளிவிபர அறிக்கையின் படி அரச பாடசாலைகளில் பணிபுரிவோரில் ஆண் ஆசிரியர்களின் எண்ணிக்கை 64310 (26%) ஆகவும், பெண் ஆசிரியர்களின் எண்ணிக்கை 183024 (74%) ஆகவும் அமைந்துள்ளது. இது

இலங்கையின் கல்வித்துறையில் பெண் ஆசிரியர்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பதைப் புலப்படுத்துகின்றது (மூலம்: கல்வி வலயம்).

அதேவேளை பால் நிலை சார்ந்த காரணிகள் பெண் ஆசிரியர்களின் வினையாற்றலில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. பெண் ஆசிரியர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு, மற்றும் சர்வதேச ஆய்வறிக்கைகள் இதனை தெளிவாகப் புலப்படுத்துகின்றன. ஆண் ஆசிரியர்களின் ஆதிக்கமஇ அதிகரித்த வேலைப்பளு, பாராபட்சம், குடும்பம்-தொழில் சமநிலையில் ஏற்படும் முரண்பாடுகள், பாலின சமத்துவமின்மைஇ அச்சுறுத்தல்கள் போன்ற பல காரணிகள் பெண் ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தாக்கத்தை செலுத்துகின்றன (சசிகலா.கு). இதன் அடிப்படையிலேயே குறித்த ஆய்வானது பெண் ஆசிரியர்களை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்படவுள்ளது.

**1.2 ஆய்வு முக்கியத்துவம்**

பெண் இனம் அனுபவிக்கும் அதிகளவான உரிமைகள் பலவகையான போராட்டங்களின் விளைவாகப் பெறப்பட்டவையே. பெண் இனத்தின் செயற்பாடுகள் பொதுவாக ஒரு சமூகத்தினால் பின்பற்றப்பட்டு வருகின்ற கலாசாரம், சமயச்சடங்குகள், சம்பிரதாயங்கள், மரபுகள், சமூக விழுமியங்கள் போன்ற பல கூறுகளால் சூழப்பட்டுக் கட்டுப்பாடுகளுடனேயே இடம் பெற்றுள்ளன. இந்த வகையில் கல்வி கற்கும் உரிமைக்காகவும் பெண்கள் பல தடைகளைத் தாண்ட வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டமையை வரலாற்று ஆதாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. (சசிகலா.கு 2012) இலங்கையின் கல்வித்துறை புள்ளிவிபரங்களின் அடிப்படையில் நோக்கும் போது பெண்களே ஆசிரிய தொழிலில் கூடுதலாக ஈடுபடுகின்றனர் என்பதன் அடிப்படையிலும் பணிசார்ந்த ரீதியில் பல சவால்களை எதிரி கொள்கின்றனர் என்பதன் அடிப்படையிலும் இவ்வாய்வானது தெரிவு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**1.3 ஆய்வுப்பிரச்சினை**

மாணவர்களின் பெறுபேற்றை மேம்படுத்துவதில் பெண் ஆசிரியர்களின் வினையாற்றல் மிக்க செயற்பாடுகள் முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றன. ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் பெண்ஆசிரியர்கள் முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கின்றன.

**1.3.1 ஆய்வின் நோக்கம்**

முகாமைத்துவம் சார் செயற்பாடுகளில் பெண் ஆசிரியர்களின் பங்களிப்பினை இனங்காணுதல்.

**1.3.2 ஆய்வின் குறிக்கோள்கள்**

1. பெண்ணாசிரியர்களின் முகாமைத்துவ ரீதியான பங்களிப்பின் தற்போதைய நிலையை இனங்காணல்.
2. பாடசாலையில் பெண்ணாசிரியர்கள் எதிர்நோக்கும் முகாமைத்துவம் சார் பிரச்சினைகளை கண்டறிதல்.
3. பாடசாலையில் பெண்ணாசிரியர்கள் எதிர் நோக்கும் முகாமைத்துவம் சார் பிரச்சினைகளிற்கான தீர்வாலோசனைகளை முன்வைத்தல்.

**2.0 இலக்கிய மீளாய்வு**

**பெண்நிலைவாதம்**

உலகலாவிய ரீதியில் தோன்றிய புரட்சிகள் அனைத்தும், அடிமைத்தனத்தை எதிர்த்து நின்ற போது, சமூகத்தில் இரண்டாந்தர நிலையாகக் கருதப்பட்டு வருகின்ற பெண்களின் நிலையும் மாற்றமடையவேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டதனால் சமூகத்தில்லுள்ளவர்கள் பெண்கள் தொடர்பாகச் சிந்திக்கத் தொடங்கினார்கள். இதனடிப்படை தான் பெண்ணியம், பெண்நிலைவாதம், பெண்ணுரிமைப் போராட்டம், பெண்விடுதலை இயக்கம் முதலியன உருப்பெற்றன. பெண்ணியம் என்ற சிந்தனையானது உலகத்திலுள்ள அனைத்து பெண்களின் முன்னேற்றம், சமத்துவம், உரிமை என்பவற்றை வலியுறுத்துவதாக அமைகின்றது.

மேலைநாடுகளில் மட்டுமன்றி கீழைத்தேய நாடுகளிலும் பெண்ணியச்சிந்தனைகள் தோன்றி வளர்ச்சி பெற்று வருகின்றன. (கவிதா.சி )

“Feminism” என்ற ஆங்கிலச் சொல் “Femina” என்ற இலத்தீன் சொல்லிருந்து மருவி வந்ததாகும். “Femina” என்ற சொல்லுக்குப் பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள (Having the qualities of female) என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிட்டு வழங்கப்பட்டது. பின்பே பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது 1889 வரை ுநஅயளைஅ என்ற சொல் பெண்களின் உரிமைகள் மற்றும் பிரச்சினைகள் என்பவற்றை சுட்டிக்காட்டி உள்ளது. அதன் அடிப்படையில் உருவாகும் போராட்டத்தையும், உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது (கவிதா.சி). 1894 ஆம் ஆண்டு “Womanism” என்ற சொல்லானது Feminism என்றே அழைக்கப்பட்டது. 1894ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போட் ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் எடுத்தாளப்பட்டது. “Feminism என்ற சொல்லுக்குத் தன் வாழ்வின் மூலம் அர்த்தம் ஏற்படுத்திக் கொடுத்தவர் ரேஸ்ரேச (Ray strachey) என்ற பெண்மணி ஆவார். (பிரேமா.இ)

**பாலின வேறுபாடும் பெண்நிலைவாதமும்**

பால் (Sex) பால்நிலை (Gender) என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று பொருள் தொடர்புடைய சொற்களாக உள்ளன. எனினும் இவையிரண்டும் வேறுபட்ட பொருளினை உணர்த்துகின்றன. ஆணையும் பெண்ணையும் உடலமைப்பிலுள்ள சில உறுப்புக்களின் அடிப்படையில் உடற்கூறு ரீதியாக வேறுபடுத்தி விளக்குவது பால் ஆகும். ஆண் - பெண் என்ற இந்த உடற்கூறு, உயிரியற்கூறு சார்ந்தும் பாகுபாடு இயற்கையாகவே அமைகின்றது. பால்நிலை என்பது மனிதனால் சமூகத்தில் கட்டமைக்கப்பட்ட ஒன்றாகும் ஆணுக்கென்றும், பெண்ணுக்கென்றும் சில பண்புகளையும், வேலைகளையும், சமூக திட்டங்களையும் வரையறுத்துக் கொள்வதாகும். (பஞ்சு)
பால்நிலை பண்பாட்டின் வெளிப்பாடு, சமூகத்தின் உருவாக்கம், ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிய வகிபங்கு நிலையைத் தீர்மானிப்பது இந்த வகையில் பால் நிலைக்கேற்ற கட்டமைக்கப்பட்ட ஆண் - பெண் என்ற உயிரிகள் அவர்களுக்குரிய நடத்தைகளை உடையவர்களாக இருக்கவேண்டும் என்று சமூகமயமாக்கப் படுகின்றது.
ஆண்,பெண் எனும் சமூக வகிபாத்திரங்களில் பெண்ணின் வகிபாகமானது தந்தை வழிச்சமூகப் பண்பாட்டு ஆதிக்கத்திற்கு என்றைக்குமே உட்பட்டு வந்துள்ளது. சமூக அரசியல், பண்பாடு, பாலியல், மொழியிலும் கூடவே பெண் மைய வடிவத்தினூடே திணிக்கப்பட்ட ஆண்மைய உள்ளடக்கங்களாகவே உள்ளன. உலகமே ஆணாதிக்கத்திற்கு உட்பட்டதாகவே உள்ளது. (Man –Made World) பண்பாட்டு நியமங்கள் அனைத்துமே ஒரு ஆணின் பார்வையால் திட்டமிடப்பட்டதாகவே அமைந்துள்ளது. இதனால் ஆண், பெண் எனும் வகிபாத்திரங்களுக்கான உரிமைப்பாட்டில் ஒரு வித சமத்துவமின்மையே பேணப்பட்டு வருகின்றது. ஆண்பால் பெண்பால் என்ற இரண்டு சொல்லாட்சிகளுக்கும் இடையில் அடிப்படையிலேயே சமச்சீரற்ற தன்மை உள்ளதை அறியமுடிகின்றது. ஆண் பெண் சமம் என்று பேசுவதெல்லாம் வெறும் உதட்டளவிலும் அமைந்துவிடுவதோடு, உண்மையான சமவுரிமைக்கான கோரிக்கை எழும் போதெல்லாம் பலவிதமான உத்திகளால் அமுக்கப்பட்டும், மறுக்கப்பட்டுமே வந்துள்ளது (ஜெயரஞ்சினி.இ).

**ஆசிரியர் சேவையில் பெண்களின் பங்களிப்பு.**

மாணவர்களை பக்குவமாக நெறிப்படுத்தக் கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களாக பெண்கள் விளங்குகின்றனர். தாய் போல பிள்ளைகளை வழி நடத்தி கல்வி அறிவூட்டக் கூடியவர்கள் பெண்களே ஆவர். எனவே பெண்களால் மட்டுமே ஆசிரியப் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும். (இராஜினி 2007)

பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கையில் 80 வீதம் ஆனோர் பெண்பால் சமூகத்தினையே பிரதிபலிப்பதாக உள்தைக் கொண்டு கல்வி உலகில் பெண்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கப் போகின்றது என்பதனை உணர்ந்து கொள்ள முடிகிறது. (இராஜேஸ்வரன் மற்றும் தீபா 2007)

**குடும்பம் தொழில் சமநிலை**

பெண்கள் எப்பொழுதும் தம் தொழிலும் தம் சொந்த வாழ்விலும் ஒரு சமநிலைத் தன்மையை பேண வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இவ்வகை சமநிலைத்தன்மை அவர்களைச் சுற்றியுள்ள பெற்றோர், கணவர், மற்றும் பிள்ளைகளில் அதிகளவு தங்கியுள்ளது. இரு வழிகளிலும் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்பந்தத்திற்குளாகின்றனர். (www. Lankascholars. Com.2016)

பெரும்பாலும் அரச பாடசாலைகளில் பணியாற்றும் ஆசியர்கள் மகிழ்ச்சிகரமாகவோ, உற்சாகமாகவோ பணியாற்றுவதில்லை. புாடசாலைகளில் ஊக்கமின்மை அல்லது மனவிரக்தியுடன் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. அரச பாடசாலைகளிலிருந்து அனுபவம் பெற்ற சிறந்த ஆசிரியர்கள் பலர் இயன்றவரை உரிய வயதுக்கு முன்பே இளைப்பாற முயல்கின்றனர். (சின்னத்தம்பி.மா 2015)

**"கற்பித்தலில் ஆசிரியர்களின் தொழில் திருப்திநிலை"** என்னும் கல்வி முதுமானி கற்கை நெறிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வானது சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டது. எளிய எழுமாற்று மாதிரியெடுப்பு முறையில் ஆய்வு மாதிரிகள் தெரிவு செய்யப் பட்டுள்ளன. ஆசிரியர்களின் சேவை அனுபவம், முகாமைத்துவத்தின் பங்களிப்பு, வதிவிடத்துக்கும், பாடசாலையின் அமைவிடத்துக்கும் இடைப்பட்ட தூரம், வேதனம் சார் காரணிகள், ஆசிரியரின் தனியாள் காரணிகள், தொழில்சார் வாண்மை காரணிகள், வகுப்பறை சார் காரணிகள் இடமாற்றக் கொள்கைகள், பாடசாலையிலும், குடும்பத்திலும் அதிகமான வேலைப்பளு, போன்ற பல காரணிகள் ஆசிரியர்களின் தொழில் திருப்தியில் செல்வாக்கு செலுத்துகின்றன என்பதே இந்த ஆய்வின் முடிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வானது குறித்த ஆய்வுடன் ஆய்வுத்தலைப்பு, ஆய்வுப்பிரதேசம் என்பவற்றுடன் வேறுபட்டிருந்தாலும் தொழில்சார் திருப்தி ஆசிரியர்களின் வினையாற்றலில் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை அறிவதற்கு இவ் ஆய்வின் முடிவுகள் உதவியாக அமைந்துள்ளன. (அபிராமி 2018)

**"ஆசிரியர்களின் செயற்றிறனில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள்"** என்னும் கல்வி முதுமானி கற்கை நெறிக்காக சமர்ப்பிக்கப்பட்ட அளவை நிலை ஆய்வானது வலிகாமம் வலயத்தின் சண்டிலிப்பாய் கோட்ட இடைநிலை பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டது. படை மாதிரி எடுப்பு முறையில் 100 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். மும்மடிகை உத்திமுறைகள் கையாளப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது.

## 3.0 ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியலினுள் ஆய்வின் நோக்கம் மற்றும் குறிக்கோள்கள் என்பன இனங்காணப்பட்டு ஆய்விற்கான பிரதேசம், ஆய்வின் சனத்தொகை பற்றிய விளக்கங்கள் பெறப்பட்டு, மாதிரித் தெரிவு முறை தேர்ந்தெடுக்கப்படும். அடுத்த கட்டமாக நம்பகம், தகுதி என்பவற்றின் அடிப்படையில் ஆய்வுக் கருவிகள் தெரிவு செய்யப்பட்டு தரவுப்பகுப்பாய்வு நுட்பங்கள் இனங்காணப்படும். இவ்வாறான விடயங்களை ஆய்வு முறையியலினுள் உள்ளடக்கலாம்.

### 3.1 ஆய்வு வடிவமைப்பு

பாடசாலையின் நிறுவனம்சார் செயற்பாடுகளில் பெண் ஆசிரியர்களின் பங்களிப்பு என்ற ஆய்வானது நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன் கல்வி வலய கோட்டம் 1இல் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அளவைமுறை வடிவமைக்கப்பட்டு பண்பறிவணுகு முறையுடன் தொகைசார் அணுகுமுறையும் இணைந்து கலப்பு ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இவ்வாய்வினை மேற்கொள்வதற்கான பிரதான ஆய்வு கருவியாக வினாக்கொத்து தயாரிக்கப்பட்டது. மாணவர்களிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் வினாக்கொத்தின் மூலமாகவும், அதிபரிடமிருந்து நேர்காணலின் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தி முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட நுவரெலியா மாவட்ட கோட்டம் 1ல் 35 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றுள் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளிலிருந்து அதிபர்கள், ஆசிரியர்கள்இ மாணவர்கள் ஆய்வு நோக்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இலகு எழுமாற்று மாதிரியைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சிரேஷ்ட இடைநிலைப்பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களுள் ஒரு பாடசாலைக்கு 5 ஆசிரியர்கள் என்ற அடிப்படையில் 50 ஆசிரியர்கள் இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**4.0 தரவுப் பகுப்பாய்வும், வியாக்கியானமும்.**

வினாக்கொத்திலுள்ள வினாக்களுக்கான தரவுகள் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. தரவு வடிவங்களைத் தெரிவு செய்து தரவுகளைச் சேகரித்ததன் பின்னர் அத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு குறித்துக் காட்டப்பட்டுள்ளது. தரவுப் பகுப்பாய்வானது விசேட நோக்கத்திற்கு ஏற்ப ஆய்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளின் மூலம் பெறப்பட்ட நேர்காணல் மூலமாக பாடசாலை அதிபர்களிடமிருந்தும் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1 திறமையின் அடிப்படையில் பெண் ஆசிரியர்களுக்கு முகாமைத்துவப் பொறுப்புக்களை வழங்கும் தன்மையினளவு**

| இல | பொறுப்புக்களை வழங்குதல் | ஆசிரியரின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மிகஅதிகம் | 1 | 1 |
| 2 | அதிகம் | 2 | 4 |
| 3 | ஓரளவு | 8 | 16 |
| 4 | குறைவு | 23 | 46 |
| 5 | மிகக்குறைவு | 16 | 32 |
| மொத்தம் | | 50 | 100 |

திறமையின் அடிப்படையில் பெண் ஆசிரியர்களுக்கு நிறுவனப் பொறுப்புக்களை வழங்கும் தன்மையினளவு குறைவு என 46% ஆனவர்களும், மிகக்குறைவு என 32%ஆனவர்களும் குறிப்பிட்டுள்ளமையானது திமையான பெண்ணாசிரியர்கள் நிறுவன ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவாகக் காணப்படுவதை அறிய முடிகின்றது.

**அட்டவணை 4.2**

பெண் ஆசிரியர்கள் முகாமைத்துவம் சார் பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடும் தன்மை.

| இல | அர்ப்பணிப்புடன் ஈடுபடும் தன்மை | ஆசிரியரின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மிகஅதிகம் | 6 | 12 |
| 2 | அதிகம் | 12 | 24 |
| 3 | ஓரளவு | 26 | 52 |
| 4 | குறைவு | 04 | 08 |
| 5 | மிகக்குறைவு | 02 | 04 |
| மொத்தம் | | 50 | 100 |

4% ஆன பெண் ஆசிரியர்கள் மிகவும் குறைவான அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்றனர். எனினும் 52% ஆனவர்கள் ஓரளவு அர்ப்பணிப்புடனேயே தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர் நிறுவனம் சார் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடும் தன்மை மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை எடுத்து விளக்குகின்றது.

**4.3 முகாமைத்துவம் சார் பொறுப்புக்களை பெண்ஆசிரியர்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளும் அளவு.**

| இல | ஆசிரியர்களின் விருப்பம் | ஆசிரியரின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மிகஅதிகம் | 5 | 10 |
| 2 | அதிகம் | 10 | 20 |
| 3 | ஓரளவு | 28 | 56 |
| 4 | குறைவு | 06 | 12 |
| 5 | மிகக்குறைவு | 01 | 02 |
| மொத்தம் | | 50 | 100 |

10% ஆன பெண் ஆசிரியர்களே முகாமைத்துவம் சார் பொறுப்புக்களை மிகவும் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்கின்றனர். பெரும்பாலான ஆசிரியர்கள் குறித்த செயற்பாடு சார்பாக குறைந்தளவு ஆர்வத்துடன் செயற்படுவதை அவதானிக்கலாம்.

**4.4 ஆண் ஆசிரியர்கள் பெண் ஆசிரியர்களின் முகாமைத்துவத்திற்குக் கட்டுப்படும் தன்மையின் அளவு**

| இல | ஆசிரியர்களின் விருப்பம் | ஆசிரியரின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மிகஅதிகம் | 1 | 2 |
| 2 | அதிகம் | 2 | 4 |
| 3 | ஓரளவு | 12 | 24 |
| 4 | குறைவு | 25 | 50 |
| 5 | மிகக்குறைவு | 10 | 20 |
| மொத்தம் | | 50 | 100 |

50% ஆன ஆசிரியர்கள் ஆண் ஆசிரியர்கள் பெண்ணாசிரியர்களின் முகாமைத்துவம் சார் செல்வாக்கினை குறைந்தளவாக ஏற்றுக் கொள்கின்றனர் என்பதனை வெளிப்படுத்தி யுள்ளனர்.

**4.5 பெண் ஆசிரியர்கள் பாடசாலையின் முகாமைத்துவம் சார் நடவடிக்கைகள் தொடர்பாக கொண்டுள்ள விளக்கம்**

| இல | தெரிவு விபரம் | ஆசிரியரின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மிகஅதிகம் | 1 | 2 |
| 2 | அதிகம் | 4 | 8 |
| 3 | ஓரளவு | 25 | 50 |
| 4 | குறைவு | 12 | 24 |
| 5 | மிகக்குறைவு | 8 | 16 |
| மொத்தம் | | 50 | 100 |

பெண்ணாசிரியர்கள் முகாமைத்துவம் சார் நடவடிக்கைகள் தொடர்பாகக் கொண்டுள்ள விளக்கத்தின் அளவு குறைவாக உள்ளமையினை மேற்படி அட்டவணை விளக்கியுள்ளது.

**4.6 பாடசாலையின் முகாமைத்துவம் சார் தீர்மானங்களையும், செயற்பாடுகளையும், வினைத்திறனாக்குவதில் பெண்ஆசிரியர்களின் ஆலோசனை மற்றும் பங்களிப்புகளுக்கு இடமளிக்கப்படும் அளவு.**

| இல | தெரிவு விபரம் | ஆசிரியரின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மிகஅதிகம் | 04 | 8 |
| 2 | அதிகம் | 07 | 14 |
| 3 | ஓரளவு | 09 | 18 |
| 4 | குறைவு | 10 | 20 |
| 5 | மிகக்குறைவு | 20 | 40 |
| மொத்தம் | | 50 | 100 |

நிறுவனத்தின் விருத்தி சார்பாக பெண் ஆசிரியர்களால் முன் வைக்கப்படும் ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புக்கள் குறைந்தளவாகவே உள்வாங்கப்படுவதனை அவதானிக்கலாம்.

**4.7 ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் கருத்துகளை முன்வைப்பதில் பெண் ஆசிரியர்களின் பங்களிப்பின் அளவு.**

| இல | தெரிவு விபரம் | ஆசிரியரின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மிகஅதிகம் | 3 | 6 |
| 2 | அதிகம் | 6 | 12 |
| 3 | ஓரளவு | 13 | 26 |
| 4 | குறைவு | 18 | 36 |
| 5 | மிகக்குறைவு | 10 | 20 |
| மொத்தம் | | 50 | 100 |

ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை முன்வைப்பதில் பெண் ஆசிரியர்களின் பங்களிப்பு ஓரளவாகவே காணப்படுகின்றது.

**5.0 கண்டறிதல்கள்**

பாடசாலைகளில் இடம் பெறும் முகாமைத்துவம் சார் செயற்பாடுகள் வினைத்திறனான வகையில் இடம் பெற்றாலே சிறந்த வெளியீடுகளை உருவாக்கமுடியும். அந்த வகையில் சிறந்த மாணவ சமூகத்தை உருவாக்குவதில் பிரதானமானவர்கள் ஆசிரியர்கள் ஆவார். குறிப்பாக பெண் ஆசிரியர்கள் பிரதானமானவர்களாக விளங்குகின்றனர். எனினும் குறித்த ஆய்வு பிரதேசத்தில் நிறுவனம் சார் செயற்பாடுகளில் ஈடுபடும் போது பல்வேறு சவால்களுக்கு உள்ளாவதை இனங்காண முடிகின்றது.

**5.1 தொழில்சார் வாண்மை தொடர்பான காரணிகள்**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண் ஆசிரியர்களில் முதுகல்விமாணிப் பட்டம் பெற்றவர்கள் குறைவானவர்களாகவே காணப்படுகின்றனர். ஆசிரியர்களின் வினையாற்றலான கற்பித்தலுக்கு உயர் தொழிற்றகைமை மிகவும் அவசியமானதாகும்.

ஆசிரியர்களின் தரமஇ திறமை, சேவைக்கால அடிப்படையில் நிறுவனம் சார் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படாத நிலைமை காணப்படுகின்றுது. இதனால் திறமை பொருந்திய ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

**5.2 தொழில்சார் அர்ப்பணிபுடன் கூடிய பங்கேற்றல்**

பகுப்பாய்வின் அடிப்படையில் நோக்கும் போது பெண் ஆசிரியர்கள் பலர் திறமை பொருந்தியவர்களாக இருந்த போதும் நிறுவனம்சார் செயற்பாடுகளில் பங்கேற்றல்

குறைவாகவே உள்ளது. பாடவேளைகளின் எண்ணிக்கை, குடும்பச்சுமை போன்றவை இதற்கான காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**5.3 பால்நிலை வேறுபாடு**

பெண் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் முகாமைத்துவம் சார் பிரச்சினைகளில் முக்கியமானது பால்நிலை வேறுபாடாகும் ஆண் ஆசிரியர் பெண் ஆசிரியர்களின் கருத்துக்களை உள்வாங்குதல், பெண்களின் முகாமைத்துவத்துக்கு கட்டுப்படுதல் என்பன குறைவாகவே காணப்படுகின்றுது. அதுமட்டுமன்றி நிறுவனம் சார் கடகைள் மற்றும் பொறுப்புக்களை தனித்து நின்று நிறைவேற்றும் தன்மையின் அளவும் குறைவாகக் காணப்படுகன்றுது.

ஆண் ஆசிரியர்களின் பதவி ஆசை மற்றும் வெகுமதிகள் பாராட்டுதல்கள் வழங்குதல் பொறுப்புக்களை வழங்குவதில் பாரபட்சம் காட்டுதல் போன்ற சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் பெண் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

**6.0 விதப்புரைகள்**

பெண் ஆசிரியர்களின் கல்வித் தகைமை, மற்றும் தொழிற்றகைமையை உயர்த்துவதற்கான வசதிகளைப் பாடசாலை முகாமைத்துவ அணியினர் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம் ஆகும்
பெண் ஆசிரியர்களின் முகாமைத்துவப் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் திறமையினடிப்படையிலும் சேவைக்காலத்தின் அடிப்படையிலும் வழங்கப்படுவது அவசியமாகும்.

பணிச்சுமையினைக் குறைக்கும் வகையில் முகாமைத்துவம் சார் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு கற்பிக்கும் பாடவேளைகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொடுத்தல் வேண்டும்.

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களில் பெண்ணாசிரியர்களின் வாண்மை விருத்தி செயற்றிட்டங்களை உள்ளடக்குவதன் மூலம் நிறுவன ரீதியான விழிப்புணர்வினை அதிகரிக்க முடியும் பால்நிலை சமத்துவத்துவத்தை நிலை நிறுத்தி ஆண் பெண் பாகுபாடின்றி திறமையின் அடிப்படையில் பொறுப்புக்களை பகிர்ந்தளிக்க வேண்டியது. பாடசாலை முகாமைத்துவத்தின் பிரதான பொறுப்பாகும்.

**உசாத்துணை நூல்கள்**

அமிர்தலிங்கம்,ச.(2015)*நவீன கல்விப்பிரயோகங்கள்.* யாழ்ப்பாணம்: சாம்பவி பதிப்பகம்.

அனந்தசயனன்,ந.(2011)*ஆசிரியர்களின் மனவழுத்தம் அவர்களின் தொழில் திருப்தியில் ஏற்படுத்தும் தாக்கம்* - யாழ்ப்பாண கல்வி வலய 1யுடீ பாடசாலை ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் அளவைநிலை ஆய்வு. கல்வியியல் முதுமாணிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கை. (பிரசுரிக்கப்படாதது).

அபிராமி,தோ.(2018)*கற்பித்தலில் ஆசிரியர்களின் தொழில் திருப்தி நிலை* – சண்டிலிப்பாய் கோட்ட 1ஊ பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு. கல்வியியல் முதுமாணிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கை. (பிரசுரிக்கப்படாதது).

இராசநாயகம்,ஜெ.,பௌநந்தி,அ.(2015)*பெண் அதிபர்கள் பாடசாலைகளை முகாமை செய்வதில் எதிர் கொள்ளும் சவால்கள்.* யாழ் வலய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

கருணாநிதி.மா.(2013)*கற்கும் சமுதாயத்தில் ஆசிரியரின் வகிபங்கு*, அகவிழி வெளியீடு.

சசிகலா.கு.(2012)*யாழ்ப்பாணத்தில் பெண் கல்வி தோற்றமும் வளர்ச்சியும்.* கொழும்பு: சேமடுப்பதிப்பகம்.

**உசாத்துணை நூல்கள்....**

Abdul Hamed,L. (2011) *Teacher's competencies and factors affecting the performance of female teacher in Bahawalpur*, International Journal of Business and social science, Vol.2.

Abiola Adeola,F. (2014)*Factors influence Black female Teacher's Job satisfaction and intention to remain in the K – 12 class room*, A mixed methods Analysis, University of North Carolia.

Adel Ismail, Alawi Eman Al saffar Zahra,H. (2021) *A study of the effects of work - family conflict,and family-work conflict,and work-life balance on Saudi female teachers'performance in the public education sector with job satisfaction as a moderator*,Journel of international women's studies Vol2

Adelina da Cruz carualho.(2020)*Motivation on Job satisfaction and employee performance,*International research journal of management,It and social science,Vol 17

Adeola Odebode.(2018)*Influence of psychosocial factors on job performance of female teachers in Kwara state,Nigeria*,International Journal of Instruction,Vol 11

Arvind,P.(2013) *A Study of work life balance of women working in teaching profession at Kolhapur* [Accessed 10 December. 2020].

Chien,G.,Mao,I.,Nergui,E.,Chang,W.(2020)*The effect of work motivation on employee performance* ,Journal of on employee performance,Journel of human resource in hospitality and tourism .

David O Fakeye.(2012)*Teachers'qualification and subject mastery as predictors of achievements in English language in Lbarapapa division, Oya state*,Glopal Journal of Human Social Science.